# ஆய்வுச்சுருக்கம்

நிறுவனமொன்றின் வெற்றியில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணியாக மனவெழுச்சி சார் நுண்மதி எண்ணக்கரு விளங்குகின்றது. கண்டி கல்வி வலய இடைநிலைப்பாடசாலை ஆசிரியர்களின் தொழில் திருப்தியில் அதிபர்களின் மனவெழுச்சிசார் நுண்மதியின் செல்வாக்கை இனங்காண்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அதிபர்களின் மனவெழுச்சிசார் நுண்மதி மட்டங்களை இனங்காணல், அதிபர்களின் மனவெழுச்சிசார் நுண்மதி மட்டங்களில் அதிபர்களின் குடியியல் காரணிகளான வயது , பால் , அனுபவம் என்பவற்றின் செல்வாக்கை இனங்காணல், ஆசிரியர்களின் தொழில் திருப்தி மட்டங்களை இனங்காணல் மற்றும் ஆசிரியர்களின் தொழில் திருப்தியில் அதிபர்களின் மனவெழுச்சிசார் நுண்மதியின் செல்வாக்கை இனங்காணல் போன்றவை இவ்வாய்வின் குறிக்கோள்களாக காணப்படுகின்றன. இவ்வாய்வின் ஆய்வு வடிவமாக விவரண அளவீட்டு ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டது. வசதி மாதிரியெடுப்பு அடிப்படையில் 30 அதிபர்களும் அவர்களின் கீழ் பணிபுரியும் 120 ஆசிரியர்களை எளிய எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்து தரவு சேகரிக்கப்பட்டது. தரவு சேகரிப்பிற்காக மனவெழுச்சிசார் நுண்மதி தேர்ச்சி வினாக்கொத்தும் பாடசாலை மற்றும் ஊழியர்கள் ஆய்வு வினாக்கொத்தும் நேர்காணலும் பயன்படுத்தப்பட்டது. ஆய்வு வினாக்களின் அடிப்படையில் மனவெழுச்சிசார் நுண்மதிக்கும் அதிபர்களின் குடியியல் காரணிகளான பால்,வயது,அனுபவம் என்பவற்றுடனான செல்வாக்கும் ஆசிரியர்களின் தொழில் திருப்தி மட்டங்.களும் நூற்றுவீதம் கணிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆசிரியர்களின் தொழில் திருப்தியில் அதிபர்களின் மனவெழுச்சிசார் நுண்மதியின் செல்வாக்கு காணப்படுவதாகவும் மனவெழுச்சிசார் நுண்மதி தேர்ச்சிகளில் அதிபர்களின் தனிப்பட்ட திறன்களை விட ஆளிடைத்தொடர்பு ,சமூக திறன்களின் செல்வாக்கு அதிகமெனவும் கண்டறியப்பட்டது. ஆசிரியர்களின் தொழில் திருப்தியை ஏற்படத்துவதற்கு அதிபர்களின் மனவெழுச்சிசார் நுண்மதியை மேம்படுத்துவது அவசியமாகும் என விதந்துரைக்கப்பட்டது.

# Abstract

Emotional intelligence is regarded as an important concept that leaders have to learn for the success of any organization.The purpose of this study was to investigate the impact of Principal's emotional intelligence on Teacher's job satisfaction in tamil medium Schools of kandy educational zone.The objectives of this study was to determine the Principal's level of emotional intelligence with regard to gender,age and years of experience,to identify the level of job satisfaction of the teachers and the influence on Principal's emotional intelligence in secondary school teacher's job satisfaction.The study employed descriptive survey method and the data were collected from a sample of 30 Principals using convenience sampling and 120 teachers using simple random sampling method.The data of this study was collected using Emotional intelligence competency (ECI) questionaire,School and staffing survey questionaire (SASS) ,interview and were analyzed by percentages.The result of the study indicated that emotional intelligence of Principal's had an influence on teachers job satisfaction and social competencies are the most influencing factor than the personal competencies of emotional intelligence.It was recommended the emotional intelligence of the Principals should be enhanced to improve the job satisfaction of the teachers.